# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1461/15 - 2006 සැප්තැම්බර් 08 වැනි සිකුරාදා - 2006.09.08

1461/15 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென் மாகாண சபை**

2006 ஆம் ஆண்டின் ................ ஆம் இலக்க நூலக சேவைகள் நியதிச் சட்டவரைவு

தென் மாகாண, மாகாண சபையின் கல்வி, உள்ளூராட்சி, கலாசார விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சான் விஜயலால் த சில்வா ஆகிய நான், இதில் பிரசுரிக்கப்பட்ட தென் மாகாண சபை 2006 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க நூலக சேவைகள் நியதிச் சட்ட வரைவு இந்த வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து 2 வாரங்களுக்குப் பின்னர் தென் மாகாண சபைக்கு முன் வைக்கப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். எவராயினும் ஒருவருக்கு இந்நியதிச் சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் பற்றி முன்வைக்க ஏதாவது விடயங்கள் அல்லது மாற்றங்கள் இருப்பின் அந்த விடயம் அல்லது மாற்றம் இத்தினங்களுக்குள் எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

சான் விஜயலால் த சில்வா,
முதல் அமைச்சரும் கல்வி, உள்ளூராட்சி, கலாசார விடயத்துக்குப்
பொறுப்பான அமைச்சரும்,
தென் மாகாணம்.

முதல் அமைச்சர் அலுவலகம்,
கல்வி, உள்ளூராட்சி, கலாசார அமைச்சு,
காலி,
2006.08.11.

**2006 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க தென் மாகாண நூலக சேவைகள் நியதிச்சட்டம்**

தென் மாகாணத்திலுள்ள வாசகர்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் திருப்திசெய்யும் நோக்குடன் அதற்கான நூலகச் சேவைகள் சபையொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச்சட்டம்

தென் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இந் நியதிச் சட்டம் தென் மாகாண சபையின் 2006 ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்க, நூலகச் சேவைகள் சபை நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், தென் மாகாண ஆளுநர் தனது சம்மதத்தை தரக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### தென் மாகாணத்தின் நூலகச் சேவைகள் சபையைத் தாபித்தல்

*தென் மாகாணத்தின் நூலகச் சேவைகள் சபையைத் தாபித்தல்.*

2. (1) (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) "தென் மாகாணத்தின் நூலகச் சேவைகள் சபை" என அழைக்கப்படும் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*சபையின் பிரதான பணி.*

3. சபையின் பிரதான பணிகளானவை, தென் மாகாண வாசகர்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் திருப்திப்படுத்தும் நோக்குடன், அத்தகைய மாகாணத்திலுள்ள நூலக சேவைகளைத் திட்டமிடுதல், தாபித்தல், ஒன்றிணைத்தல், முறையான பராமரிப்பு மற்றும் நிர்வகித்தலாக இருத்தல் வேண்டும்.

*சபையின் ஏனைய பணிகள்.*

4. மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளினது பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, சபையின் ஏனைய பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :–

(அ) நூலகம் மற்றும் தகவல் சேவைகள் விடயத்தில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதலும் ;

(ஆ) தென் மாகாணத்தின் பிரதான நூலகமாக விருத்தி செய்யப்பட வேண்டிய மாகாண மத்திய நூலகம் ஒன்றைத் தாபித்தலும், பேணுதலும், நிருவகித்தலும் ;

(இ) மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்டப் பிராந்திய நூலகங்களைத் தாபித்தலும், பேணுதலும் நிருவகித்தலும் ;

(ஈ) நிதிகள் கிடைக்கக் கூடியனவாகவிருப்பதற்கேற்ப, தென் மாகாணத்தின் உள்ளூரதிகார சபை இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் தாபித்தலும் அந்நோக்கத்துக்கும் முறைப்பாடுகளுக்கும் இடையேயான இணைப்பாகப் பணியாற்றுதலும் ;

(உ) தென் மாகாண நூலக சேவை தொடர்பில் தோதானதொரு கொள்கையை உருவாக்குவதுடன் அத்தகைய நூலகம் ஒவ்வொன்றிலும் பேணப்பட வேண்டிய தராதரங்களை அறிமுகப்படுத்தலும்;

(ஊ) நூலக விஞ்ஞானம் மற்றும் ஆவணங்களைப் பேணுதல் மீதான ஆளணியினருக்கு பயிற்சியளித்தலும் ;

(எ) சபையினால் தாபிக்கப்படும் ஒவ்வொரு நூலகத்தையும் பேணுவதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் அத்தகைய நூலகங்களுடன் இணைந்துள்ள வாசகர் கழகங்களைத் தாபித்தலும் அந்நோக்கத்துக்காக நூலகத்துக்குச் சபைக்கும் இடையேயான இணைப்பாகப் பணியாற்றுதலும் ;

(ஏ) குறிப்பாக முதியோர் இல்லங்கள் மற்றும் மறியற்சாலைகளில் வசிப்பவர்களுக்கு நூலக சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படும் நூலகங்களுடன் இணைந்துள்ள நடமாடும் நூலகச் சேவைகளைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஐ) இளம் தலைமுறையின் வாசிக்கும் பழக்கங்களை விருத்தி செய்வதனை ஊக்குவிக்கும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் மற்றும் வேறு தோதான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்துதலும், நூலகங்களுக்கு ஒப்பப் பணங்களைச் செலுத்தி ஆதரவளிப்பதன் பெறுமதியை அவர்களுக்குப் புகட்டுதலும் ;

(ஒ) வரலாற்றுப் பெறுமதிமிக்க புத்தகங்கள், கல்வெட்டுக்கள் மற்றும் பதிவேடுகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை ஒன்று சேர்த்தலும் பாதுகாத்தலும் ;

(ஓ) தென் மாகாணம் தொடர்பான புத்தகங்கள், கல்வெட்டுக்கள் மற்றும் பதிவேடுகளை ஒன்று சேர்த்தலும் பாதுகாத்தலும் ; அத்துடன்

(ஔ) தென் மாகாணத்தில் நூலகச் சேவைகளை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள நூலகச் சேவைகளுடன் ஒருங்கிணைதலும் ஒத்துழைத்தலும்.

*மத்திய நூலகத்தின் பணிகள்.*

5. (1) நான்காம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட தென் மாகாண மத்திய நூலகம் தென் மாகாணத்தில் முதன்மை நூலகமாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(2) இருபதாம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி மத்திய நூலகத்தின் பிரதான நூலகத்தின் பிரதான நூலகராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(3) கலந்தாலோசனையுடன் அமைச்சர் மத்திய நூலகத்திற்கு தோதான அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

(4) மத்திய நூலகம் சபையினால் பேணப்படும் வேறு நூலகங்களுக்கு உயர்தொழில் ஆலோசனை, தொழில்நுட்ப உதவி மற்றும் வேறு பொருளுதவியை வழங்கலாம்.

6. (1) அமைச்சரின் கலந்தாலோசனையுடன் முதலமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைச் சபை கொண்டிருத்தல் வேண்டும் :- சபையின் அமைப்பு.

(அ) நூலகச் சேவைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்கள் சபையின் அமைச்சரினது அமைச்சுச் செயலாளர் ; அவரே சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) உள்ளூராட்சிக்கான மாகாண ஆணையாளர் ;

(இ) மாகாண பணிப்பாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மாகாண கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ;

(ஈ) இலங்கை நூலகச் சேவைகள் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினரொருவர் ;

(உ) தென் மாகாணத்தின் பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளின் தலைமை நூலகர்களிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினரொருவர் ;

(ஊ) தென் மாகாண உள்ளூர் அமைப்புகள் மகாநாட்டினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(எ) ஏதேனும் துறைகளில் தகைமை பெற்றவர்களும் நூலகங்களை மேம்படுத்துவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் அக்கறை காட்டியிருக்கின்றவர்களும் தென் மாகாணத்தில் நிரந்தரமாக வதிகின்றவர்களுமான ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இரு உறுப்பினர்கள்.

(2) ஓராம் உட்பிரிவில் (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர் இதனகத்துப் பின்னர் "நியமன உறுப்பினர்" ஒருவரெனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

7. (1) நியமன உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பு, பதவி விலகுகை அல்லது அகற்றுகை மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும். உறுப்பினர்களின் பதவிக் காலம்.

(2) ஆறாம் பிரிவின் பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவி வழி உறுப்பினர்கள், அவர் எப்பதவியின் பயனைக்கொண்டு சபையுறுப்பினரொருவராக நியமிக்கப்படுகின்றாரோ அப்பதவியை வகிக்கும்வரை பதவி வகித்தல் வேண்டும்.

8. ஆளொருவர் - உறுப்பினரொரு வராக இருப்பதற் கான தகைமை யீனம்.

(அ) பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது உறுப்பினரொருவராக வரின் ;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இராதிருப்பின், அல்லது இல்லாதொழியின் ;

(இ) சபையினால் அல்லது சபையின் சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருப்பின் அல்லது துய்ப்பின் ; அல்லது

(ஈ) சபையின் உறுப்பினரொருவரென்ற முறையில் அவரது பணிகளை அவர் ஆற்றுவதனைப் பங்கமான வகையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை அவர் கொண்டிருப்பின்,

சபையில் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

நியமன உறுப்பினர்களை அகற்றுதலும் பதவியிலிருந்து விலக்குதலும்.

9. (1) முதலமைச்சர், அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், காட்டப்பட வேண்டிய காரணங்களுக்காக நியமன உறுப்பினரெவரையும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(2) நியமன உறுப்பினர் எவரினதும் இறப்பு, பதவி விலகுகை அல்லது அகற்றுகை காரணமாகப் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில், முதலமைச்சர், அமைச்சரின் கலந்தாலோசனையுடனும், 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டும், அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கென வேறெவரேனுமாளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினர், அவர் ஏவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) நியமன உறுப்பினரெவரும், முதலமைச்சருக்கு அப்பொருள்பட முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் பதவியிலிருந்து விலகலாம்.

(4) (அ) நியமன உறுப்பினரொருவர், சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் முதலமைச்சருக்குத் தெரிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அதன்மேல் முதலமைச்சர், அமைச்சரின் கலந்தாலோசனை யுடனும் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்துட் கொண்டும், அவரின் இடத்திற் செயலாற்றவென வேறெவரேனு மாளை நியமிக்கலாம்.

(ஆ) முன்னறிவித்தலின்றி அடுத்தடுத்து நிகழும் மூன்று கூட்டங்களுக்கு வருகை தருவதற்கு தவறியுள்ள எவரேனும் நியமன உறுப்பினர், அவர் மீள நியமிக்கப்பட்டாலொழிய, அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டம் நடைபெறும் தேதியிலிருந்து சபையின் உறுப்பான்மையை வறிதாக்கியுள்ளாரெனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களுக்கான ஊதியம்.

10. சபையுறுப்பினர்களுக்கு, அமைச்சர், முதலமைச்சரின் கலந்தாலேசனையுடன் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய படியானது செலுத்தப்படலாம்.

தவிசாளரும் கூட்டங்களில் அலுவலர்களை நடாத்துதலும்.

11.(1) தவிசாளர், அவர் சமூகமாயிருக்கும் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகை தராதுள்ளவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், அக்கூட்டத்தில் தலைமை தாங்கவெனத் தம்மிடையேயிருந்து இன்னோர் உறுப்பினரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தீர்மானத்திற்கான எல்லா பிணக்குகளும் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையான வாக்குகளால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். சமமான வாக்குகள் பெறப்படும் பட்சத்தில், தவிசாளர் அல்லது தலைமை தாங்குகின்ற உறுப்பினர் தனது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகை நேரத்திலும் இடத்திலும் சபையானது அவசியமான வாறு அடிக்கடியாகக் கூடுதல் வேண்டுமென்பதுடன், எவ்விடத்திலும் ஒவ்வொரு இரண்டு மாதத்திலும் ஆககக்குறைந்தது ஒரு தடவையாவது கூடுதலும் வேண்டும் ; அத்துடன் இந்நியதிச் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் விதிக்கும் அமைய, அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பிலுமான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(5) தவிசாளர், சபையின் மூன்று உறுப்பினர்களால் சபையின் விசேட கூட்டத்தைக் கூட்டும்படி கேட்டுக்கொண்டதன் பின்னர் ஏழு நாட்களுள் சபையானது விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

12. சபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படலாகாது. வெற்றிடமொன்று காரணமாகச் செயல்கள் செல்லுபடியற்றனவாதலாகாது.

13. சபையானது, சபையின் எவரேனும் உறுப்பினருக்கு, இந்நியதிச் சட்டத்தினால் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைக் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கையில், புரிகையில் அல்லது ஆற்றுகையில் அத்தகைய உறுப்பினர் சபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கு அமைந்தவராதலும் வேண்டும். உறுப்பினர்களுக்குத் தத்துவங்களைக் கையளித்தல்.

14.(1) சபையின் இலச்சினையானது, சபையினால் தீர்மானிக்கப்பட்டு உருவாக்கப்படலாமென்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும் படலாம். சபையின் இலச்சினை.

(2) சபையின் இலச்சினையானது, காலத்துக்குக்காலம் சபை முடிபுசெய்யக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) சபையின் இலச்சினையானது, சபையின் அனுமதியுடனன்றியும், தவிசாளரினதும் சபையின் உறுப்பினரொருவரினதும் சமுகத்திலன்றியும், ஏதேனும் சாதனத்துக்கு அல்லது ஆவணத்துக்கு இடப்படுதலாகாது; அவர்கள், தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையின் இலச்சினையானது எந்தச் சாதனங்களுக்கும் அல்லது ஆவணங்களுக்கும் இடப்படுகின்றதோ அந்தச் சாதனங்களும் அல்லது ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைச் சபையானது பேணுதல் வேண்டும்.

15. சபையானது, பின்வருவனவற்றுக்கான தத்துவமுட்பட, அதன் பணிகளை ஆற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம் :- சபையின் தத்துவங்கள்.

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைவுவைத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது வேறு வகையாகக் கையாளுதல் ;

(ஆ) சபைக்கு உரித்து மாற்றப்பட்ட அல்லது சபையினால் கொள்ளப்பட்ட ஏதேனும் காணியின்மீது கட்டிடங்களை நிர்மாணித்தல் ;

(இ) சபையின் பணிகளை ஆற்றுவதற்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் நேரடியாகவோ அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்துகொள்ளுதலும் புரிதலும் ;

(ஈ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும் ;

(உ) சபையின் பணிகளை ஆற்றும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனாகப் பெறுதல் ;

(ஊ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள மூலங்களிலிருந்து அசைவுள்ள, அசைவற்ற மானியக் கொடைகள், நன்கொடைகள், மரணக் கொடைகள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளுதலும் பெறுதலும் அதன் பணிகளை ஆற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்துதலும் ;

(எ) சபையின் அலுவல்களை முகாமைசெய்தல் தொடர்பில் விதிகளையாக்குதல் ; அத்துடன்

(ஏ) சபையின் பணிகளைத் தகுந்த முறையில் ஆற்றுவதனை வசதிப்படுத்துவதற்கு அவசியமான வாறான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

குழுக்களை நியமித்தல்.

16. சபையானது, அமைச்சரின் முன்னங்கீகாரத்தோடு –

(அ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டுள்ள அத்தகைய குழுக்களை நியமிக்கலாம் ;

(ஆ) அத்தகைய குழுக்களின் விசாரணைக்குரிய விடயங்கள், தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(இ) அத்தகைய குழுக்களின் அலுவலர்களை நடாத்துவதற்கான விதிகளையாக்கலாம்.

## பாகம் II

### நிதி

சபையின் நிதியம்.

17. (1) சபையானது நிதியக் கணக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியக் கணக்கினுள் செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) மாகாண சபையினால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ, எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும், நன்கொடைகள் அல்லது மரணக் கொடைகள், உதவி அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாகச் சபைக்குக் கிடைக்கக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) சபையின் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் விற்பனையிலிருந்தான வரும்படிகள் என்ற வகையாகச் சபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகைகளும்.

(3) பின்வருவன நிதியக் கணக்கிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிக்கையிலும், புரிகையிலும், ஆற்றுகையிலும் அதனால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இந்நியதிச் சட்டத்தினால் அல்லது இந்நியதிச் சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றவாறான அல்லது தேவைப்படுகின்ற வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(4) சபையானது, சபையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும், அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

## பாகம் III

### *சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியையும் சபையின் பணியாட்டொகுதியினரையும் நியமித்தல்*

18. (1) சபையானது, நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் அனுபவமும் தகைமைகளுமுள்ள ஆட்களிடையேயிருந்து சபையின் பணியாட்டொகுதிக்குப் பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டும். *சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல்.*

(2) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் முதன்மை நிர்வாக அலுவலராகவும் செயலாளராகவும் இருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, சபையின் பொதுவான பணிப்புகளுக்கமைய, சபை அலுவல்களின் நிருவாகமும், சபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் கட்டுப்பாடும் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். அவர் சபையின் எல்லாப் பணிப்புகளையும் நிறைவேற்றுவதற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையினால் அவருக்கு கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும், ஆற்றுதலும் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் ஏதேனும் கூட்டத்தில் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படும் ஏதேனும் குழுவின் எக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து உரையாற்றவும்; ஆனால் வாக்களிக்காதிருக்கவும் உரித்துடையவராதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவி, பணிப்பாளர் தலைமையதிபதி இறப்பதன்மேல், அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி தவிசாளருக்கு அப்பொருட்பட முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் பதவி விலகுவதன்மூலம் வறிதாதல் வேண்டும்.

19. (1) சபையானது அதன் பணிகளைத் தகுந்த முறையிலும் திறமையாகவும் ஆற்றுவதற்கு அவசியமென சபை கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம். *சபையின் ஏனைய பணியாட்டொகுதிகள்.*

(2) இந்நியதிச் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, சபையானது -

(அ) சபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம் ;

(ஆ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(ஈ) சபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காகச் சகாய நிதியமொன்றையும் வேறேதேனும் சேம நலத் திட்டத்தையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாமென்பதுடன், அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகளையும் செலுத்தலாம்.

20. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், தென் மாகாணத்தின் மாகாணப் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அவ்வலுவர் எவ்வமைச்சின் கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அவ்வமைச்சின் செயலாளரினதும் தென் மாகாணத்தின் ஆளுநரினதும் சம்மதத்துடன், அதே சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கலாம். *சபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

(2) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு மாகாண சபைக்குச் சேவை புரிவதற்கு உடன்பட்டு ஏதேனும் ஒப்பந்தத்தை மாகாண சபையுடன் செய்துகொண்ட எவரேனுமாளைச் சபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் சபைக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் அவரது கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக மாகாண சபைக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### *பொது*

வழக்குக்கான பாதுகாப்பு.

21. (1) துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் –

(அ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காகச் சபைக்கெதிராக ;

(ஆ) இந்நியதிச் சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்பேரில் சபையின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அவருக்கு எதிராக, தொடுக்கப்படுலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் சபையினால் அல்லது சபைக்கெதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சபையினால் பெறப்படும் ஏதேனும் செலவு சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் சபைக்குச் செலுத்தப்படும் அல்லது சபையினால் அறவிடப்படும் எவையேனும் செலவுத் தொகைகள் அத்தகைய நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்பேரில், (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அவரினால் உறப்படும் ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதின்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் அறிக்கை மாகாண சபையின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

22. சபையானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிந்த பின்னர் ஆறு மாத காலப்பகுதியினுள், அவ்வாண்டின்போது சபையின் செயற்பாடுகள் பற்றி முழுமையான கணக்கொன்றைக் கொடுக்கின்ற அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவர், அத்தகைய அறிக்கை எவ்வாண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துப் பின்வரும் ஆண்டில் முடிவுக்கு முன்னர் அத்தகைய அறிக்கையை மாகாண சபையின்முன் இடுவித்தல் வேண்டும்.

அமைச்சர், சபைக்குப் பணிப்புகளை விடுத்தல்.

23. சபையானது, இந்நியதிச் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் அதன் கடமைகளை ஆற்றுகையிலும் அமைச்சரினால் அதற்கு விடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கு அமைந்ததாதல் வேண்டும்.

விதிகள்.

24. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இந்நியதிச் சட்டத்தினால் தேவைப்படுகின்ற அல்லது அவை தொடர்பில் இந்நியதிச் சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் சபையானது விதிகளையாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்படும் விதியெதுவும், மாகாண சபையினால் அது அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயனுறுதலாகாது.

25. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடொன்றை மீறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாகலாம். தவறுகள்.

26. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள் உரை மேலோங்கி நிற்றல்.

27. இந்நியதிச் சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"ஆளுநர்" என்பது, தென் மாகாணத்தின் ஆளுநர் என்று பொருளாகும் ;

"அமைச்சர்" என்பது, நூலகச் சேவைகள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள தென் மாகாணத்தின் அமைச்சர்கள் சபை அமைச்சர் என்று பொருளாகும் ;

"“விதித்துரைக்கப்பட்ட" என்பது, இந்நியதிச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியினால் வித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும் ;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தென் மாகாண சபை என்று பொருளாகும்.

9-729

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.